நாள்.24.02.2025

**அசல் வழக்கு எண். 22/2010**

**பெயர்.அப்பாசாமி**

**த.பெ.சுந்தராஜ்பிள்ளை**

**வா.சா.2- 8 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

19.09.2011 அன்று 2 ம் பிரதிவாதி மோகன் எதிர்வழக்குரை தாக்கல் செய்த விபரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் ஆமாம். 2 ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை 1 ம் எதிர்வாதி ஏற்கொண்டார் என்று நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும் . எதிர்வழக்குரையில் 2 ம் பிரதிவாதி வா .சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது . கிரைய ஒப்பந்த பத்திரத்தில் தொகை நிச்சயக்கப்பட்டது ரூ .70,000/- என்றால் சரிதான். ஒரு செண்ட், குழி எவ்வளவு என்று சொல்லவில்லை என்றால் சரிதான் . கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட சமயத்தில் தாவா சொத்தின் சந்தை மதிப்பு எவ்வளவு என்று தெரியாமல் ஒப்பந்தம் செய்துக்கொண்டோம் என்றால் ஆமாம் . ரூ.70,000/- என்பது ஒப்பந்த தேதியில்தான் முடிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை அதற்கு 1 வாராத்திற்கு முன்பு முடிவு செய்யப்பட்டது . ஒப்பந்த பத்திரத்தில் எனது தந்தை சுந்தராஜ்பிள்ளை தொகை கொடுத்ததாக இல்லை என்றால் சரிதான். சுந்தராஜ்பிள்ளை மகன்கள் கொடுத்ததாகதான் உள்ளது என்றால் சரிதான் . 1975 ல் 30,000 என்பது பெரிய தொகை என்றால் சரிதான் . அந்த சமயத்தில் நாங்கள் என்ன வேலை செய்துக்கொண்டிருந்தோம் என்றால் விவசாயம் . விவசாய வேலையை தவிற வேறு வேலை செய்யவில்லை என்றால் ஆமாம் . ரூ.30,000/- எப்போது கொடுத்தேன் என்றால் அக்ரிமெண்ட் போடுவதற்கு 20 நாட்களுக்கு முன்பே கொடுத்தேன் . அதை நான் எழுத்து மூலமாக எழுதிக்கொல்லவில்லை என்றால் ஆமாம். ரூ.30,000/- கொடுப்பதற்கு எனக்கு வசதி இல்லை ஆனால் நான் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை . மீதி ரூ.20,000/-கு கெடு போடபப்பட்டது என்றால் இல்லை ரூ .50,000/- தான் கெடுபோட்டது. மேற்படி ரூ.50,000/- எப்போது கொடுக்கவேண்டும் என்று தேதி குறிப்பிட்டுள்ளது என்றால் அக்ரிமெண்ட் போடுவதற்கு முன்பே ரூ .30,000/- கொடுத்துவிட்டு அக்ரிமெண்ட் போட்ட அன்று ரூ .20,000/- கொடுத்துவிட்டேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ' **பாக்தி தொகை ரூ .20,000/- யை ரிஜிஸ்டார் பார்வையில் செலுத்துவதாக கண்டு கிரைய பத்திரத்தை 1 வது நபர் தன் செலவில் 1 வது நபர் தன் பெயரிலாவது அல்லது அவர் விரும்பும் நபர்கள் பெயரிலாவது எழுதிய பத்திரத்தை 2,3 நபர்களிடம் கையெழுத்து வாங்கி ரிஜிஸ்டார் பார்வையில் பணம் செலுத்திய பத்திரத்தை 16.04.1976 குள் பதிவு செய்துகொள்ளவேண்டியது'** என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கெடு

என்பது ரொம்ப முக்கியம் என்று உள்ளது என்றால் ஆமாம் . வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள படி 16.04.1976 குள் ரூ .20,000/- கொடுத்து பதிவு செய்துகொள்ளவேண்டும் என்று உள்ளது என்றால் ஆமாம். கெடு நீட்டிப்பு பற்றி வா.சா.ஆ.1 ல் இல்லை என்றால் சரிதான் . கெடு தேதிக்கு முன்பு நான் ரூ.20,000/- கொடுக்கவில்லை என்றால் ஆமாம் . எனக்கு பண வசதி இல்லை என்பதால் என்னால் கொடுக்கமுடியவில்லை என்றால் இல்லை . 16.04.1976 கெடு தேதிக்கு பிறகு எப்போது நான் ரூ.20,000/- கொடுத்துள்ளதாக வா.சா.ஆ.1 குறிப்பிட்டுள்ளது என்றால் 03.03.1977 ல் ரூ .9,000 ம் 17.10.1979 ல் ரூ .4,000 ம் 20.10.1980 ல் ரூ .7,000 கொடுத்தேன்.மகாராஜசமுத்திரத்தில் உள்ள சொத்து பலலெட்சங்கள் போககூடிய சொத்து அதன் நான் மோசடியாக வா .சா.ஆ 1 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் இல்லை . வா.சா.ஆ 1 ஆவணத்தில் endorsement ல் உள்ள கையெழுத்துக்கள் மாரியம்மாள் மற்றும் சண்முகதேவர் கையெழுத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. 16.07.1976 ல் கெடு இருந்தும் எனக்கு வசதி இல்லை என்பதால் கெடு தேதி முடிந்து பணம் செலுத்தியதாக நான் மோசடியாக endorsement நானே எழுதிக்கொண்டேன் என்றால் இல்லை . ரூ.20,000/- யை நான் 4 வருடம் கழித்துதான் நான் கொடுத்ததாக எனது ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான் . மேற்படி 20000/- எங்கே யார் முன்னிலையில் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . ஒரு சொத்தை வாங்குவதற்குமுன்புதான் வில்லங்கசான்று எடுத்து பார்ப்போம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் தான் கிரைய ஒப்பந்தம் எழுதியபோது 1 வது நபர் 3 மாத கெடுவிற்குள் 2,3 நபர்களிடமிருந்து வாங்கி 3 மாத கெடுவிற்குள் 1 வது நபரிடம் வில்லங்க சான்றிதழை கொடுத்துவிடவேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான் . நடைமுறையில் ஏற்பட்ட உண்மையான ஆவணமாக இருந்திருந்தார் வில்லங்கசான்று எடுத்துபார்த்துவிட்டு ஒப்பந்தம் செய்திருப்போம். அதனால் வா.சா.ஆ.1 ஆவணம் போலியான ஆவணம் என்றால் சரியல்ல.

**<u>8 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him/her to be Correct.*

Sd/S.Kavipriya,B.A.L.L.B.,

District Munsif, Pattukkottai.